பக்கங்கள்: 10

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 20 திங்கட்கிழமை 06.10.2025 கதிர் 330

### இது ரகசியம் அல்ல!



வடக்கில் அரசியல் நகைச்சுவை நடிகர் ஒருவர் இருப்பதைப் போலவே கடந்த வாரத்தில் தெற்கிலும் ஒரு அரசியல் நகைச்சுவை நடிகரைப் பற்றித்தான் சமூக ☞ 2

# பொலிஸ் ஆணைக்குழு சுயாதீனத்தை இழந்தது

## தயாசிறி எம்.பி. குற்றச்சாட்டு

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் ஊடாக பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கப்பட்டுசுயாதீனமாக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று முழுமையான அரசியல் தலையீட்டினால் பொலிஸ் ஆணைக்குழு அதன்சுயாதீனத்தன்மையைஇழந்துள்ளது. ஜே.வி.பி. செயற்பாட்டாளரான பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தீர்மானத்துக்கமையவே பொலிஸ்மா அதிபர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர விசனம் வெளியிட்டார்.

குருணாகலில்நேற்றுசெய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் ஊடாக பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கப்பட்டுசுயாதீனமாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய வெவ்வேறு காரணிகள் தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இடமாற்றம், நியமனங்கள் உள்ளிட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் தற்போது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் நியமனங்களில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன.

அரசமைப்பின் ஊடாகத் தமக்காக உறுதிப்படுத்தப்பட்ட சுயாதீனத்தன்மையை பொலிஸ் ஆணைக்குழு கைவிட்டுள்ளது. ஆளும்தரப்பின்அழுத்தத்தின்காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் எதற்காக இவற்றை அனுமதிக்கின்றார்? தற்போது சகல அதிகாரங்களும் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டு 17ஆவது திருத்தத்துக்கு முன்னர் காணப்பட்டதைப் போன்று பொலிஸ் முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. ☞ 8

# அரசுத் தலைவரின் செலவு 72 சதவீதத்தால் அதிகரிப்பு

## காரணத்தை விளக்கக் கேட்கிறார் தயாசிறி எம்.பி.

அரசுத் தலைவர் அநுரகுமார 2026ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில்அரசுத்தலைவருக்கான செலவுகளுக்காக 11.37 பில்லியனை ஒதுக்கியிருக்கின்றார். இது 2024இல் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கான செலவைவிட 72 சதவீத அதிகரிப்பாகும். இவ்வாறு பெருமளவு நிதி ஒதுக்கீட்டுக்கான காரணத்தை அரசுத் தலைவரும், ஆளும்தரப்பும் மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்று ஐக்கியமக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருணாகலில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலத்தில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கான செலவுகள் 6.6 பில்லியன் ரூபாவாகும். அது 2025இல் அநுரகுமார திஸாநாயக்கவின் முதலாவது வரவு - செலவு திட்டத்தில் 2.9 பில்லியன் வரை குறைக்கப்பட்டது. அது தொடர்பில் ஆளும்தரப்பால் பெரும் பரப்புரைகளும் முன்னெடுக்கப்பட்டன. ஆனால்தற்போதுநாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டுள்ள 2026ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் அது 11.37 பில்லியனாக ☞ 2

# இலஞ்சம் தொடர்பில் 4,500 முறைப்பாடுகள்

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதி வரையில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக 4,500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ☞ 2

## ஒழிப்பதாக வாக்குறுதியளித்தபோதும்

# நிறைவேற்றதிராக முறைமையை பலப்படுத்தவே ஆளும்தரப்பு முயற்சி

## குற்றஞ்சாட்டுகிறார் ஹர்ஷன நாணயக்கார எம்.பி.

**நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் முறைமையை இல்லாதொழிப்பதாகக் கூறிக் கொண்டு ஆட்சியேற்றவர்கள் இன்று, புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதாக கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றனர். இந்த முறைமையை நீக்குவதற்கு பதிலாக அதனைமேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையே தற்போது ஆளும்தரப்பு முன்னெடுத்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.**

**கம்பஹாவில் நேற்று ஞாயிற்றுக்** ☞ 2

# 16 வயதில் பாலியல் சுதந்திரம் தந்தால் கர்ப்பத்திற்கு யார்தான் பதில்சொல்வது?

## காவிந்த ஜயவர்த்தன எம்.பி. கேள்வி

நாட்டின் சொத்துக்களான சிறுவர்களை தவறாக வழிநடத்துவதற்கான சூழலை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு உருவாக்கிக் கொண்டிருக்கிறது. 16 வயது பூர்த்தியான சிறுவர்கள் பாலியல் உறவில் ஈடுபட சுதந்திரம் வழங்கினால், அந்த வயதிலுள்ள சிறுமியொருவர் கர்ப்பமடைந்தால் அதற்கு சபைமுதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்கவும் வழங்கும் பதில் என்ன என ☞ 8

# இலங்கை ரோம் உடன்படிக்கையில் ஒருபோதும் கையெழுத்திடக்கூடாது

## மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னாள் ஆணையர் அழுத்தம்

இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக 58 இராணுவத்தினருக்கு ஒரு சில நாடுகளுக்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இலங்கையானது ரோம் உடன்படிக்கையில் ஒருபோதும் கைச்சாத்திடக்கூடாது. அவ்வாறு கைச்சாத்திட்டால்இராணுவத்தினர்பலநெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கியநாடுகள்மனித உரிமைகள்பேரவையில் பலஸ்தீனம் பற்றி தற்போது அதிகளவில் பேசப்படுகிறது. இலங்கை உட்படப் பெரும்பாலான நாடுகள் பலஸ்தீனத்தை ஒரு நாடாக ☞ 2

## காற்றாலைத் திட்டத்தில்

# மன்னார் மக்களுக்கு அநுர தந்த வாக்குறுதியை நிறைவேற்றுக

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. வலியுறுத்து

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையை நாம் வரவேற்கின்றோம். ஆனால் மன்னாரில் மக்களின் விருப்பத்துக்கு மாறாக அந்த திட்டம் முன்னெடுக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. மக்களுடன் கலந்துரையாடி அவர்களது விருப்பத்துக்கேற்பவே அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என அரசுத் தலைவர் அநுரகுமார ☞ 2

# மின் கட்டணம் 6% அதிகரிக்கும்

சர்வதேச நாணய நிதியத்தை மகிழ்வித்து, ஐந்தாம் தவணை தொகையை பெற்றுக்கொள்வதற்காக மின்கட்டணத்தை 6 சதவீதமளவில் அதிகரிப்பதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. சுயாதீன பொதுப்பயன்பாடுகள்ஆணைக்குழுமீது நம்பிக்கை கிடையாது. பொதுமக்களின் அபிலாசைகளைகேட்பதுகாலத்தையும், அரச நிதியையும் வீணடிக்கும் செயற்பாடாகும்எனமின்பாவனையாளர் சங்கத்தின்தலைவர்அதுலதெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மின்பாவனையாளர் சங்கப் பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வலைத்தளங்களில் அதிகம் பேசப்பட்டது.

தற்போதைய திசைகாட்சிக்குள் நட்சத்திர நகைச்சுவை நடிகரா மிளிர்பவர் வேறு யாருமல்லர், தொழில்துறை அமைச்சர் சுனில் ஹந்துன்னெட்டிதான். அவர் விரைவாக மக்களுக்கான தலைமை பொழுதுபோக்கு பாத்திரத்தைப் பெற்றுள்ளார்.'ஹண்டுன்'கதாபாத்திரம் என்று குறிப்பிடும் அளவிற்கு அவரது நகைச்சுவை வெளிப்பாடுகள் மிகப் பிரமாதம் என்கிறார்கள். அவரது 'பிரபலமான அறிக்கைகள்'சமூக ஊடகங்கள்மற்றும்பரந்தபொதுமக்களிடையே நகைச்சுவையாக மாறி, அவரை ஒரு தேசிய கேலிச்சித்திரமாக மாற்றியுள்ளன.

ஒரு சர்வதேச உச்சிமாநாட்டில், ஒரு மதிப்பீட்டாளரின் கேள்விக்கு பதிலளிக்கத் தெரியாமல் அவர் சமாளித்த விதம் நாடு முழுவதும் சிரிப்பலைகளைச் சிதறவிட்டது. 'சுனாமிமனிதனால்உருவாக்கப்பட்டபேரழிவு' என்ற அவரது கருத்து இணையத்தில் வைரல் ஆனதுடன் ஒரு சிரிப்பலைப் புரட்சியையே ஏற்படுத்தியிருந்தது.

பின்னர், டெரானாவின் 360 நிகழ்ச்சியில், ஹந்துன் நெத்தியிடம் சொத்துக்கள் எப்படி வந்து சேர்ந்தன என்று வெளிப்படுத்தும்படி அழுத்தம்கொடுத்தபோது, அதற்குநேரடியாகப் பதிலளிக்காமல் 'அது உங்கள் வேலையா?' என்று நையாண்டிசெய்து தப்பிக்கப்பார்த்தார். பின்னர், தனது சொத்துக்கள் குறித்து அல்லது ஆளும்தரப்பினரின் சொத்துக்கள் குறித்து சந்தேகம் ஏற்படும் எவரும் முறையான நிறுவனங்களில் முறைப்பாடு வழங்கலாம் என்று அவர் கூறினார். இப்படி நெறியாளரை ஏய்த்து அவர் தப்பிக்க முயற்றமையைப் பார்த்து நாடு சிரிப்பில் மூழ்கியது.

அவரது டேலட்ஸ்ட் சிரிப்பலை நிகழ்ச்சி மிக அண்மையில் வந்தது. இலங்கையின் தேயிலை பற்றிப் பேசுகையில், ஜப்பானிய ஏலத்தில் சிலோன் டீ 'நோபல் பரிசை வென்றது' என்று ஹந்துனெட்டி அறிவித்தார். உண்மையில் நடந்தது என்னவென்றால், இலங்கைதேயிலைஅங்குசாதனைவிலைக்கு விற்கப்பட்டு கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தது என்பதுதான். நோபல் பரிசை கின்னஸ் உலக சாதனையுடன் குழப்புவதன் மூலம், ஹந்துனெட்டி மீண்டும் நாட்டிற்கு நகைச்சுவைப் பாத்திரமானார்.

ஜேவிபி ஆளும்தரப்பில் 2ஆவது இடத்தில் இருக்கும் பிமல் ரத்நாயக்க, கடந்த வாரம் தனது போக்குவரத்து அமைச்சில் பத்திரிகையாளர்களை சந்தித்தபோது ஹந்துனெத்தி பற்றி ஒரு பத்திரிகையாளர் அவரிடம் கேட்டார். உடனே பிமல் சத்தமாக, கட்டுப்படுத்த முடியாத சிரிப்பை வெளிப்படுத்தினார். அவர் நீண்ட நேரம் சிரித்தார். ஒரு கட்டத்தில் தலையைத் திருப்பி, நெற்றியைத் தேய்த்து, தொடர்ந்து சிரித்துக் கொண்டே இருந்தார். அந்த சிரிப்புக்குப் பின்னால் வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத அளவுக்கு ஆழமான ஒரு கதை இருந்தது.

வார்த்தைகளுக்குப் பதிலாக சைகைகள் மற்றும்உடல்மொழியைபிமல்தேர்ந்தெடுத்தது இது முதல் முறை அல்ல. ஒரு காலத்தில் ரணிலின் ஒருங்கிணைப்புச் செயலாளராகப் பணியாற்றிய சமன் அதவுடஹெட்டியின் புத்தகத்தை வெளியிடுவதற்காக பிரீட்ரிக்எபர்ட் ஸ்டிஃப்டுங் ஏற்பாடு செய்த விழாவில் அவர் கலந்துகொண்டபோது இதேபோன்றசம்பவம் நிகழ்ந்தது. அந்த நிகழ்வில், ஏற்பாட்டாளர்கள் வேண்டுமென்றே ரணிலையும் பிமலையும் ஒருவருக்கொருவர் அடுத்த வரிசையில் அமர வைத்தனர். முன்னதாக வந்த ரணில் ஏற்கனவே அமர்ந்திருந்தார். பின்னர் பிமல் அவருக்கு அருகில் அமர்ந்தபோது, அவர் ஒரு வார்த்தையும் சொல்லாமல் தனது அதிருப்தியைக் காட்டினார் - ரணிலின் பக்கவாட்டில் கண்ணை கையால் மூடிக்கொண்டு மறுபுறம் மட்டும் பார்த்தார். அந்த புகைப்படம் அப்போது சமூக ஊடகங்களில் வைரலானது. இப்போது, அப்போது போலவே, ஹந்துன்னெட்டியின் குறிப்பைக் கேட்டு பிமலின் சிரிப்பு சமூக ஊடகங்களில் பரவலாகப் பரவியுள்ளது.

உண்மையானகேள்வி்என்னவென்றால், பிமல்போன்றஜே.வி.பி.யின்முக்கியதலைவர் ஒருவர் ஹந்துன்னெத்தியைப் பார்த்து ஏன் இவ்வளவு பகிரங்கமாக சிரிக்கிறார்? ஒரு காரணம் இருக்கிறது. திசைகாட்டி ஆட்சிக்கு வந்த சில மாதங்களுக்குப் பிறகு, பிமல் ஒரு தொலைக்காட்சி நேர்காணலை அளித்தார், அதில் அவர் 'ஆளும்தரப்பின் முகம் மாறவேண்டும்' என்று கூறினார். அவர் பிரதமரின் பதவியைப் பற்றிக்கூட சூசகமாக கூறினார், ஆளும்தரப்பு 'இயந்திரம்' மாற்றியமைக்கப்படவேண்டும், அமைச்சர்களின் பொறுப்புக்கள் மாற்றப்பட வேண்டும் மற்றும் அமைச்சரவை மாற்றம் விரைவில் வர வேண்டும் என்று கூறினார்.

ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு, ஹந்துன்னெட்டி மற்றொரு சேனலில் தோன்றி பிமலுடன் நேரடியாக முரண்பட்டார். அமைச்சரவை மாற்றம் எதுவும் திட்டமிடப்படவில்லை, அத்தகைய விவாதங்கள் எதுவும் நடக்கவில்லை, ஒவ்வொரு அமைச்சரும்தங்கள்கடமைகளைமுறையாகச் செய்கிறார்கள் என்று அவர் வலியுறுத்தினார். பலர் கவனிக்கத் தவறினாலும், இது பிமலுக்கு ஒரு மெல்லிய மறைமுகமான கண்டனம், மேலும் அது அவரை ஒரு சங்கடமான நிலையில் வைத்தது. ஹந்துன்னெத்தியின் வார்த்தைகள், பெலவத்தவின் பிமலுக்குஎதிராக அரசுத் தலைவரால் பயன்படுத்தப்பட்டவை என்பதை அரசியல் பார்வையாளர்கள் உணர்ந்திருந்தனர். எனவே, கடந்த வாரம் பிமல் தனது பத்திரிகையாளர் சந்திப்பில் சிரித்தபோது, பலர் அதை ஒரு பழிவாங்கலாகக் கண்டனர்.

இருந்தாலும் ஒரு காலத்தில் 'கபுடா கா... கா...'' என்று பஸில் ராஜபக்சவை ஜேவிபியினர் வறுத்தெடுத்த இடத்தில் அவர்களை வறுத்தெடுக்க எதிர்க் கட்சிகளுக்கு ஒரு ஹந்துநெத்தி கிடைத்திருக்கிறார். அவரது நகைச்சுவை வெளிப்படுத்தல்கள் மக்களுக்கு நல்லபொழுதுபோக்கைவழங்கியிருக்கின்றன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நிறைவேற்றதிராக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குகருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கஜ் உண்பதற்காக கோடிக்கணக்கில் செலவிட்டுள்ளார் என்று இந்த ஆளும்தரப்பு குற்றஞ்சாட்டியது. ஆனால் தற்போது அரசுத் தலைவர் அநுரகுமார அதனைவிடப் பெரும் தொகையைச் செலவிட்டிருக்கின்றார். நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் முறைமையை இல்லாதொழிப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சியேற்றவர்கள் இன்று, புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதாக கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் முறைமையை நீக்குவதற்கு பதிலாக அதனை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

அன்றுமக்களிடம்கூறியஅனைத்தையும் மறந்துநிறைவேற்றதிகாரத்தைமுழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஓய்வு பெற்ற அரசுத் தலைவர்களுக்கு ஓரளவுக்கேனும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். எவ்வாறிருப்பினும் கடந்த காலங்களில் இந்த சிறப்புரிமைகள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதையும் நாம் பார்த்திருக்கின்றோம். எனவே இதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்போது அவற்றை அரசியல் பழிவாங்கல்களுக்காக முன்னெடுக்காமலிருப்பதை ஆளும்தரப்பு உறுதிப்படுத்தவேண்டும்.

குறிப்பாக, முன்னாள் அரசுத் தலைவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அந்த பொறுப்பை ஆளும்தரப்பு ஏற்கவேண்டும். ஆனால் ஆளும்தரப்பு வெறுமனே அரசியல் பழிவாங்கல் நோக்கத்தில் மாத்திரமே அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறது.

ஆளும்தரப்பின் அனுமதியுடன் எவ்வித சோதனைகளும் இன்றி 323 கொள்கலன்கள் துறைமுகத்திலிருந்து விடுக்கப்பட்டன. அவற்றிலிருந்த இரு கொள்கலன்களிலிருந்தே அண்மையில் பெருமளவான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இந்தக் கொள்கலன்களில் போதைப்பொருட்கள் இருப்பதாக சர்வதேச நிறுவனங்கள் எச்சரித்திருந்த நிலையிலும், அந்த எச்சரிக்கையை உதாசீனப்படுத்தி இவற்றை எவ்வித சோதனைகளும் இன்றி விடுவிப்பதற்குஆளும்தரப்புதீர்மானித்துள்ளது. எனவே இந்த விடயத்தில் அரச தரப்பினும் ஒத்துழைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது மிகத் தெளிவாகிறது. எனவே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எனப் பார்த்துக் கொண்டிருக்காமல் உடனடியாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆளும்தரப்பை வலியுறுத்துகின்றோம் என்றார்.

## மன்னார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய வாக்குறுதியை தற்போது நிறைவேற்ற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த, அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத்தலைவர்அநுரகுமாரமன்னாருக்குச் சென்றிருந்தபோது, மக்களுடன்கலந்துரையாடி அவர்களது குரலுக்குச் செவி சாய்த்து அதற்கேற்பவே அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரையில் ஆளும்தரப்பு அவ்வாறு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. நானும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் கடந்த வாரம் மன்னார் சென்றிருந்தோம்.

மன்னார் தீவை அண்மித்து கடல் மட்டத்துக்கு கீழுள்ள நிலப்பரப்பில் மணல் அகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் தமது குடியிருப்புக்கள் நிலத்துக்குள் தாழக் கூடும் என்றும், சுனாமி போன்ற இயற்கை இடர்கள் ஏற்பட்டால் பெரும் அழிவுகள் ஏற்படும் என்றும் மக்கள் அச்சப்படுகின்றனர். அத்தோடு மக்களின் விருப்பத்துக்கு மாறாக காற்றாலை மின் உற்பத்தி திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது.

மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையை நாம் வரவேற்கின்றோம். ஆனால் மன்னாரில் மக்களின் விருப்பத்துக்கு மாறாக அந்த திட்டம் முன்னெடுக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் வழங்கிய வாக்குறுதிகளை நம்பியே அந்த மக்கள் ஆளும்தரப்புக்கு வாக்களித்தனர். எனவே மக்கள் விருப்பம் தெரிவித்தால் மாத்திரம் இந்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுமாறு வலியுறுத்துகின்றோம் என்றார்.

## அரசுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்வடைந்துள்ளது.

2024இல் ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஒதுக்கப்பட்டிருந்த நிதியைவிட இது 72 சதவீத அதிகரிப்பாகும். ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் சில வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு தமக்கு குறிப்பிட்டளவு நிதி தேவை ஏற்படும் என்பதை இப்போதாவது அரசுத் தலைவர் அநுரகுமார புரிந்து கொண்டிருப்பார் என நம்புகின்றோம். 2024இல் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடு 1.15 பில்லியனாகும். 2025இல் இது 1.17 பில்லியனாக அதிகரிக்கப்பட்டது. 2026க்காக நிதி ஒதுக்கீடு 0.9 பில்லியனாகக் குறைவடைந்துள்ளது. அதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். ஆனால் அரசுத் தலைவர்க்கான நிதி ஒதுக்கீடு ஓராண்டுகள் சுமார் 6 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அரசுத் தலைவரின் பதில் என்ன? கடந்த காலங்களில் அரசுத் தலைவர்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டபோது அவற்றை கடுமையாக விமர்சித்த ஜே.வி.பியினர் இப்போதாவது யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். தமதுசட்டைப்பைகளைநிரப்பிக்கொள்வதற்காக எந்தவொரு அரசுத் தலைவரும் நிதியை ஒதுக்கிக் கொள்வதில்லை.

அது மாத்திரமின்றி கடந்த காலங்களில் நிதி அமைச்சு அரசுத் தலைவரின் கீழிருப்பது முற்றிலும் தவறு என்றும் இவர்கள் கூறினர். ஆனால் இன்று என்ன நடந்திருக்கிறது? பொருளாதாரம் தொடர்பில் நிபுணத்துவம் அற்ற அரசுத் தலைவர் அநுரகுமார தற்போது நிதி அமைச்சை தன்வசப்படுத்தி, தனக்கேற்றவாறு நிதி ஒதுக்கீடுகளைச் செய்து கொண்டிருக்கின்றார். இவ்வாறான செயற்பாடுகளுக்கு அரசுத் தலைவரும் ஆளும்தரப்பும் நிச்சயம் பதிலளிக்க வேண்டும் என்றார்.

## மின் கட்டணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

மின்கட்டணத்தை 6.8 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு பரிந்துரைத்துள்ளது. இதற்கமைய மின்கட்டண திருத்தம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் மாகாணஅடிப்படையில்பொதுமக்களிடமிருந்து கருத்துக்களை கேட்கிறது.

இதற்கமைய இறுதி கருத்து கோரல் ஒக்டோபர் 15 கொழும்பில் நடைபெறவுள்ளது.

மின்கட்டணம் குறைக்கப்படும் என்ற தீர்மானத்தை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிக்காது, மாறாக மின்கட்டணத்தை அதிகரிக்க அனுமதி என்ற அறிவிப்பையே வெளியிடும்.

இறுதியாக இடம்பெற்ற மின்கட்டண திருத்தத்தின் போது மின்சாரசபை 8 பில்லியன் ரூபாய் வரை இலாபடைந்திருந்தது என்று குறிப்பிட்டோம். இருப்பினும் மின்கட்டண குறைப்புக்குச் சாதகமான காரணிகள் மற்றும் தரவுகள் பற்றிய பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு கவனத்திற் கொள்ளவில்லை. மாறாக மின்கட்டணத்தை அதிகரிப்பதற்குரிய சாதககாரணிகளை மாத்திரமே ஆணைக்குழு ஆராய்ந்தது.

சர்வதேச நாணய நிதியத்தை மகிழ்வித்து, ஐந்தாம் தவணைத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக மின்கட்டணத்தை 6 சதவீதமளவில் அதிகரிப்பதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. சுயாதீன பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மீது நம்பிக்கை கிடையாது.

ஆளும்தரப்பின் நோக்கங்களுக்கு அமைவாகவே பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு செயற்படுகிறது. மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் மக்களின் அபிலாசைகளை கோருவது பயனற்றது என்றார்.

## இலஞ்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரை 4,626 முறைப்பாடுகள் தங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைத்ததாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அந்தக்காலகட்டத்தில், 85 சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டு 58 பேர் கைது செய்யப்பட்டதாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பொலிஸ் அதிகாரிகள் என்பதுடன், அவர்களின் எண்ணிக்கை 19 பேர் ஆகும்.

கைது செய்யப்பட்டவர்களில், 08 பொலிஸ் சார்ஜென்ட்கள், 05 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் மூன்று உப பொலிஸ் பரிசோதர்களும் அடங்குவதாக கூறப்படுகிறது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதி வரையில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் நீதி அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களைச் சேர்ந்த 09 பேர், மூன்று கிராம சேவகர்கள், இரண்டு பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் இரண்டு அதிகாரிகளும் அடங்குவதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதியில் சுற்றிவளைப்புகளின் போது கைது செய்யப்பட்டவர்களைத் தவிர, விசாரணைகள் தொடர்பாக மேலும் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அரசியல்வாதிகள், அரசு நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் வைத்தியர்கள் உள்ளிட்டவர்களும் அடங்குவதாக ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு, நீதிமன்றங்களில் 61 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளது.

இலஞ்சம் வாங்கியதற்காக 36 வழக்குகளும், ஊழல் குற்றத்திற்காக 15 வழக்குகளும், முறைக்கேடாக சொத்துக்கள் ஈட்டியமைக்காக 10 வழக்குகளும் 75 நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த காலப்பகுதியில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட 44 வழக்குகளை நிறைவு செய்துள்ளதுடன், அவற்றில் 29 நபர்கள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீதிமன்றங்களில் மேலும் 276 வழக்குகள் நிலுவையில் இருப்பதாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரிப்பதற்கு முன்வந்துள்ளன. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உரையாற்றும்போது

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# ஊழல் விசாரணை ஆணைக்குழு பணிப்பாளர் நியமனம் முறையற்ற விதத்திலேயே நடந்தது

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

ஊழலை இல்லாதொழிக்கும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் முறையற்ற வகையில் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளபோது எவ்வாறு நாட்டில் ஊழல் இல்லாதொழியும்? ஊழல் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்? இந்நியமனத்தின் போது அரசமைப்பு ஆளும்தரப்பால் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளது என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக ரங்க திஸாநாயக்க நியமிக்கப்பட்ட முறைமை குறித்தே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேல் நீதிமன்றத்தின் நீதிபதி ரங்க திஸாநாயக்கவை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக நியமித்ததை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதால் இந்த நியமனம் பற்றி நாங்கள் ஏதும் பேசவில்லை. ஆனால் இந்த மனு அண்மையில் மனுதாரர்களினால் மீளப்பெறப்பட்டுள்ளது. உறுதியான காரணிகள் உள்ள பின்னணியில் மனு மீறப்பெறப்பட்டமை சந்தேகத்துக்குரியது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பத்திரிகைகளில்விண்ணப்பிக்கும்அறிவித்தலைவிடுத்திருந்தார். இந்தப் பதவிக்கு விண்ணப்பித்தவர்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் மாதவ அபேவரத்ன மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திஸாநாயக்க ஆகிய இருவரும் முக்கியமானவர்களாக் காணப்பட்டனர்.

இந்த பதவிக்காகக் கோரப்பட்ட அடிப்படைத் தகைமை மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திஸாநாயக்கவின் விண்ணப்பத்தில் இல்லாத நிலையிலும் அவர் அரசமைப்புப் பேரவைக்கு நேர்காணலுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ரங்க திஸாநாயக்கவை இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்குமாறு அரசுத் தலைவரின் நேரடி நியமனமான சப்ரகமுவ மாகாண ஆளுநர் மற்றும் வடமத்திய மாகாண ஆளுநர் ஆகியோர் பரிந்துரைத்துள்ளார்கள்.

மாதவ அபேரத்னவின் பெயரை முன்னாள் சட்டமா அதிபர் ரஞ்சய் ராஜரத்னம் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர் (ஓய்வு) யசந்த கோதாகொட ஆகியோர் பரிந்துரைத்துள்ளார்கள். ஆகவே இந்த பரிந்துரை அரசியல் நோக்கமற்றது.

ரங்க திஸாநாயக்கவின் பரிந்துரை தொடர்பில் அரசமைப்பு பேரவையில் கேள்வியெழுப்பப்பட்ட போது அமைச்சர் பிமல் ரத்நாயக்க ரங்க திஸாநாயக்கவை பரிந்துரைத்தவர்கள் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களல்லர். ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னரே அவர்கள் இந்தப் பரிந்துரையைமுன்வைத்துள்ளார்கள் என்றுகுறிப்பிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து அரசமைப்பு பேரவையின் சிவில் உறுப்பினரான தினேஷா சமரரத்ன நியமனத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயத்தை அவர் ஆராய்ந்து பார்த்துள்ளார். அதாவது மாகாண ஆளுநர்கள் அரசுத் தலைவரால் 2024.09.25 நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் பணிப்பாளர் நாயக பதவிக்காக விண்ணப்பம் 2024.10.13 கோரப்பட்டுள்ளது. ஆகவே பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டது பொய் என்பதை உணர்ந்து அவர், இந்த விடயத்தை சபாநாயகர் ஊடாக அரசுத் தலைவருக்கு அறிவுறுத்தி, அரசமைப்பு பேரவையின் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரியுள்ளார். இருப்பினும் இவரது கடிதத்தை கருத்திற் கொள்ளாமல் இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக ரங்க திஸாநாயக்கவை அரசுத் தலைவர் நியமித்துள்ளார்.

ஊழலை இல்லாதொழிக்கும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் முறையற்ற வகையில் நியமிக்கப்பட்டுள்ளபோது எவ்வாறு நாட்டில் ஊழல் இல்லாதொழியும்? ஊழல் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்? ரங்க திஸாநாயக்கவை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக நியமித்ததை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு மீளப்பெறப்பட்டமை பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

# பெக்கோ சமனின் மைத்துனரும் கைதாகிப் பொலிஸ் காவலில்

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான பெக்கோ சமன் வெளிப்படுத்திய தகவல்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட அவரது மைத்துனரை 7 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

புதுக்கடை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட சந்தேகநபரை 07 நாட்கள் தடுப்பு காவல் உத்தரவுக்கு அமைய தடுத்து வைப்பதற்கு மேல் மாகாண வடக்கு குற்றவியல் பிரிவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டில்கைதுசெய்யப்பட்ட'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான பெக்கோ சமன்' என்ற நெதுன்கொட நிர்மலபிரசன்னவிடம்முன்னெடுக்கப்பட்டவிசாரணையில் வெள யான தகவல்களின் அடிப்படையில், அவரது மைத்துனரை பெலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்தனர்.

சந்தேகநபரிடம் இருந்த போதைப்பொருள் மற்றும் மோட்டார் வாகனத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ள நிலையில், அவர் மேலதிக விசாரணைகளுக்காக மேல் மாகாண வடக்கு குற்றவியல் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மித்தெனிய, வெலிப்பிட்டியவைச் சேர்ந்த 27 வயதானவர் என்பதுடன், அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, அந்தப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கைத்துப்பாக்கி, 01 தோட்டா மற்றும் 550 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் ஆகியவை மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் குறித்து மேல் மாகாண வடக்கு குற்றவியல் பிரிவு மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பிற்பகல் நேரங்களில் மழை பெய்ய வாய்ப்பு

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 1.00 மணிக்குப் பிறகு மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என்று அந்த திணைக்களம் வெளயிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 50 மி.மீட்டருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் கடும் காற்று மற்றும் பலத்த மின்னல் தாக்கத்தால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

# ஒரு கட்சி ஆட்சி முறைக்கு மறைமுகமாக அநுர முயற்சி

## தொலவத்த எம்.பி. தெரிவிப்பு

நிறைவேற்றதிகாரத்துடன் நாடாளுமன்றத்திலும் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகிறது. ஆனாலும் அரசுத் தலைவர் அநுரகுமார இவை போதாது எனக் கூறுகின்றார். இதன் ஊடாக மறைமுகமாக ஒரு கட்சி ஆட்சி முறைமையை ஏற்படுத்துவதற்கு ஆளும்தரப்பு முயற்சிப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது மாகாண சபைகளின் அதிகாரம் முற்றுமுழுதாக அதிகாரிகள் வசமாகியுள்ளது. அவர்கள் ஆளும்தரப்பின் பிரதிநிதிகளாகவுள்ளனர். மறுபுறம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் காணப்படுகிறது. இவை அனைத்துக்கும் மேலாக நிறைவேற்றதிகாரமும் காணப்படுகிறது. ஆனால் இவ்வாறு அதி உச்ச அதிகாரங்களை தம்வசம் வைத்துக்கொண்டும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு அவை போதாது என அரசுத் தலைவர் கூறுகின்றார். தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனிக்கட்சி ஆட்சி முறைமைவேண்டும் என்கின்றனர்.

தற்போது தாஜுதீன் கொலை விவகாரம் மீண்டும் பேசுபொருளாகியுள்ளது. கடந்த காலங்களில் ராஜபக்சக்களை இதனுடன் தொடர்புபடுத்தியவர்கள், இன்று அதை வேறு திசைக்கு கொண்டு சென்றுள்ளனர். உண்மையில் இவை எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்துவதற்காகக் கூறப்படும் கதைகளாகும்.

போதைப்பொருள் ஒழிப்புத் திட்டங்கள் எனக் கூறிக் கொண்டு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் பிரதானி பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் பல கிலோ கிராம் போதைப்பொருட்களை கைப்பற்றி அழிப்பதாகக் கூறினாலும், எமக்கு கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் சமூகத்தில் போதைப்பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. போதைப்பொருள் பரப்புரை தோல்வியடைந்துள்ளதால், தாஜுதீன் கொலையை பேசுபொருளாக்கியிருக்கின்றனர். ஆளும்தரப்பின் இயலாமை இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனநாயத்தை அழித்து ஒரு கட்சி ஆட்சிமுறைக்கு ஒருபோதும் இடமளியோம் என்றார்.

# போதைக் குற்றச் சந்தேகநபர்கள் 7 பேர் தென் மாவட்டங்களில் கைது

தென் மாகாணத்தின் பல பகுதிகளுக்கு'குஷ்' போதைப்பொருளை விநியோகித்த ஏழு சந்தேகநபர்களை மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட குற்றவியல் பிரிவினர் இன்று (5) கைது செய்தனர்.

ஹபராதுவ மற்றும் பத்தேகம பகுதிகளில் நடத்தப்பட்ட சோதனையின் போது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து சுமார் 4 கோடி ரூபாய் பெறுமதியான 5.6 கிலோ கிராம் ஹேஷ் போதைப்பொருளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

மீண்பிடித்தல் என்ற போர்வையில் இந்த போதைப்பொருள் கடத்தலில் அவர்கள் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரான மிதிகம ருவனின் உதவியாளரான மிதிகம ரணா உள்ளிட்ட ஏழு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிதிகம ரணாவிடம் நடத்தப்பட்ட விசாரணைக்கு அமைய ஏனையோர் கைது செய்யப்பட்டனர்.

கடலில் மிதந்து கொண்டிருந்த போதைப்பொருள் தொகையை கரைக்கு கொண்டு வந்து விற்பனை செய்ததாக சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

தென் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலத்தின் அறிவுறுத்தலின் பேரில், மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட குற்றவியல் பிரிவின் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் உதய குமார இந்த சம்பவம் குறித்து மேலதி விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உலகிற்கான எச்சரிக்கை மணி

அமெரிக்காவின் புதிய Secretary of War (போர் செயலாளர்) பீட் ஹெக்செத் அண்மையில் நூற்றுக்கணக்கான அமெரிக்க இராணுவத் தலைவர்கள்முன் ஆற்றிய உரை உலகளவில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது. அரசியல் வாதம், இராணுவத்தின் மேல் அரசியல் சாயல், மற்றும் அதிகாரத்தின் வெளிப்படையான காட்சிப்படுத்தல் என பல்வேறு கோணங்களில் அது விமர்சிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் அரசியல் வரலாற்றில் இராணுவம் பெரும்பாலும் சுதந்திரமான, அரசியலற்ற அமைப்பாகக் கருதப்பட்டாலும், டிரம்ப் நிர்வாகம் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர் நிகழும் மாற்றங்கள் அந்தச் சீர்திருத்தத்தை ஆபத்துக்குள்ளாக்குகின்றன.

### புதிய திசை

ஹெக்செத்தின் உரையின் மையக்கருத்து, அமெரிக்க இராணுவம் இனி சமூக முன்னேற்றம் அல்லது சமூக வலுவூட்டல் போன்ற செயல்களில் ஈடுபடாது; அவர்களின் ஒரே குறிக்கோள் போர் தயாரிப்பு, போர் திறன் மேம்பாடு, மற்றும் இராணுவ வலிமை அதிகரிப்பே ஆகும் என்றது. இது அமெரிக்கா பல தசாப்தங்களாகப் பேசிவந்த ‘rules–based order’ (விதிமுறை அடிப்படையிலான உலக ஒழுங்கு) என்ற கருத்தை முற்றிலும் புறக்கணிக்கின்றது. “ஆற்றலே நீதி” (Might is Right) என்ற பழைய சிந்தனையை மீண்டும் வெளிப்படுத்துவதாக இது பார்க்கப்படுகிறது.

### ஒருதலைப்பட்ச நடவடிக்கை

அமெரிக்க வெளிநாட்டு கொள்கையில் ஒரு ஆபத்தான மாற்றம் தென்படுகிறது. பல்தரப்பு உரையாடல், பன்னாட்டு ஒத்துழைப்பு போன்ற பழைய வழிகளை விட்டு விலகி, ஒருதலைப்பட்ச ராணுவ நடவடிக்கையை முன்னிலைப்படுத்தும் போக்கு வலுப்பெற்றுள்ளது. ஹெக்செத்தின் உரை, இராணுவத்தை அமெரிக்காவின் பிரதான ஆட்சிக் கருவியாக பயன்படுத்தும் டிரம்ப் அணுகுமுறையை உறுதிப்படுத்துகிறது. அணு ஆயுதங்களை மேம்படுத்துதல், விரைவான “surgical strikes” (அறுவைச் சிகிச்சை போல் துல்லியமான தாக்குதல்) மேற்கொள்ளும் கொள்கை ஆகியவை எதிர்கால நோக்கங்களை வெளிப்படுத்துகின்றன.

ஆனால், கடந்த கால அனுபவங்கள் காட்டியது போல, இப்படியான விரைவான தாக்குதல்கள் பலமுறை நீண்டகால யுத்தங்களுக்கும் தலைமுறைகள் தாண்டி தாக்கங்களை ஏற்படுத்தும் பிரச்சினைகளுக்கும் வழிவகுத்துள்ளன.

### புலனாய்வு அமைப்பின் தலையீடு

டிரம்ப் நிர்வாகம், தனது புலனாய்வு அமைப்புகளை மறுசீரமைத்து, ‘அரசுக்கு நம்பிக்கை காட்டுவோர்கள் மட்டுமே முக்கியம்’ என்ற அடிப்படையில் மாற்றங்களைச் செய்கிறது. ஆனால், புலனாய்வின் வலிமை சுதந்திரத்திலும், தொழில்முறைத் திறனிலும் இருக்க வேண்டும். அதிகாரத்திற்கு விசுவாசம் காட்டும் கொள்கை மேலோங்கும்போது, அது அமெரிக்காவையே அல்லாது உலகளாவிய பாதுகாப்பையும் பாதிக்கக்கூடும்.

### ஆபத்தான முன்னேற்றம்

அமெரிக்காவில் ஜனநாயகத்தின் கண்காணிப்பு அமைப்புகள், நீதித்துறை, மற்றும் சுயாதீன நிறுவனங்கள் மீது டிரம்ப் நிர்வாகம் காட்டும் அழுத்தம் ஏற்கனவே பரவலாக விமர்சிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அமெரிக்க இராணுவத்தை உள்நாட்டிலேயே “எதிரியை அடக்கும் கருவி” ஆகப் பயன்படுத்தும் சாத்தியம் குறித்து ஹெக்செத்தின் உரை பேசுகிறது. நகரங்களை மீண்டும் கைப்பற்றும் பயிற்சியிடமாகக் கருதி, அமெரிக்க மக்களையே எதிரிகளாகக் கருதும் உவமை மிகுந்த ஆபத்தான சிந்தனையை வெளிப்படுத்துகிறது.

இது அமெரிக்க ஜனநாயகத்திற்கே ஒரு சவாலாக அமையும். மேலும், அமெரிக்காவை ஒரு மாதிரியாகக் கருதி வந்த பல சிறிய ஜனநாயக நாடுகளுக்கு மிகுந்த அச்சுறுத்தலாக மாறும்.

### உலகிற்கான தாக்கங்கள்

அமெரிக்காவின் புதிய அரசியல் பாணி, உலக தெற்கில் உள்ள நாடுகளுக்குப் பெரும் சிக்கலை உருவாக்குகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் பல தசாப்தங்களாக வலியுறுத்திய ஜனநாயகம், மனித உரிமை, விதிமுறை அடிப்படையிலான ஒழுங்கு ஆகியவை இப்போது வெறும் பேச்சாகவே தோன்றுகின்றன. சக்தியை மட்டுமே முன்னிறுத்தும் அரசியல், உலகளாவிய நிலைப்பாட்டை பாதிக்கும். சிறிய நாடுகள் தங்கள் உள்நாட்டு பாதுகாப்பு, பொருளாதாரம், வெளிநாட்டு கொள்கை ஆகியவற்றில் புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

ஹெக்செத்தின் உரை வெறும் அரசியல் நாடகம் அல்ல; அது உலகத்திற்கு ஒரு எச்சரிக்கை மணி. அமெரிக்கா தனது இராணுவத்தை முழுமையாக அரசியல் கருவியாகப் பயன்படுத்தும் நிலைக்கு மாறிக்கொண்டிருக்கிறது. உள்நாட்டு எதிரிகளை அடக்க இராணுவத்தை பயன்படுத்தும் ஆபத்தான போக்கு, வெளிநாட்டில் ஒருதலைப்பட்சத் தாக்குதல்களை முன்னெடுக்கும் போக்கு — இவை அனைத்தும் உலக ஜனநாயகங்களுக்கான எச்சரிக்கைகளாகும்.

அமெரிக்கா ஜனநாயகத்தின் சின்னமாக இல்லாமல், இராணுவ வலிமையின் அடையாளமாக மாறும் அபாயம் வெளிப்படுகிறது. இந்நிலையில், சிறிய நாடுகள் தங்கள் சுயாதீனமும் நிலைத்தன்மையும் காக்க அதிக கவனத்துடன் முன்னேற வேண்டியது அவசியம்.

---

தாஜுதீன் கொலை வழக்கில்

# குற்றமேதும் செய்யாவிட்டால் நாமல் ஏன் கலங்கவேண்டும்?

பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க கேள்வி

ரக்பி வீரர் வசீம் தாஜுதினின் படுகொலைக்கும், ராஜபக்சக்களுக்கும் தொடர்பு உள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிடவில்லை. பல உண்மைகள் வெளிவரும் போது நாமல் ராஜபக்ச கலக்கமடைந்துள்ளார். குற்றமிழைக்காவிடின் கலக்கமடைய வேண்டிய அவசியமில்லை என்று காணி மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் அடக்குமுறைக்கு எதிராக ஒன்றிணைவதாக எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிட்டுக்கொண்டு திரிகிறார்கள். ஆளும்தரப்பு எவ்வாறான அடக்குமுறையைமேற்கொள்கிறதுஎன்று எதிர்க்கட்சியினர் தெளிவாக குறிப்பிட வேண்டும். மக்களின் கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்துக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் ஆளும்தரப்பு மேற்கொள்ளவில்லை.

அரச நிதி மோசடிக் குற்றச்சாட்டில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் இவ்வாறு ஒன்றிணைந்துள்ளார்கள். தமது ஊழல் மோசடியும் வெளிப்படுமோ என்று அச்சமடைந்துதான் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக ஒன்றிணைந்துக் கொள்கிறார்கள்.

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு ஆளும்தரப்புக்கு எவ்வித சவாலாகவும் அமையாது. கடந்த காலங்களில் பிணைமுறி திருடன், குண்டுத் தாக்குதலுக்குப் பொறுப்புதாரி, மிக்விமான கொள்வனவு மோசடியாளர் என்று ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டவர்கள் இன்று நண்பர்களாகியுள்ளனர். இவர்களின் கூட்டிணைவு அவர்களுக்கே எதிரானதாக அமையும்.

ரக்பி வீரர் வசீம் தாஜுதினின் படுகொலைக்கும், ராஜபக்சக்களுக்கும் தொடர்பு உள்ளது என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் குறிப்பிடவில்லை. பல உண்மைகள் வெளிவரும்போது நாமல் ராஜபக்ச கலக்கமடைந்துள்ளார். குற்றமிழைக்காவிடின் கலக்கமடைய வேண்டிய அவசியமில்லை.

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட கச்சா என்பவரின் மனைவி குறிப்பிட்ட விடயத்தையே பொலிஸ் ஊடக பேச்சாளர் வெளிப்படுத்தினார். இவ்விடயத்தில் நாமல் ராஜபக்ச கலக்கமடைந்துக் கொண்டு ஆளும்தரப்பை குற்றஞ்சாட்டுகிறார். விசாரணைகள் ஊடாகப் பல விடயங்கள் வெளிவரும், ஆகவே அச்சமடைய தேவையில்லை என்று நாமல் ராஜபக்சவுக்கு குறிப்பிட்டுக் கொள்கிறோம் என்றார்.

---

# மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்கான வட்டி அதிகரிப்பு கடனைப் பெருக்கும்

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. கவலை தெரிவிப்பு

அரச நிதி பற்றிய குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்திற்கான நிதியுதவியின் வட்டி விகித அமைப்பை மாற்றுவதற்கான முன்மொழிவு குறித்து கவலை தெரிவித்துள்ளார். இது நாட்டின் கடன்பெறும் செலவுகளை அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில்இதுகுறித்துப்பதிவிட்டுள்ள ஹர்ஷ டி சில்வா, ஏற்கெனவே தாமதமாகி, அதிகரித்து வரும் வட்டிச் சுமையால் பாதிக்கப்பட்டிருக்கும் 226 பில்லியன் ரூபாய் மதிப்பிலான இந்தத் திட்டம், நடந்து வரும் நிதி மற்றும் ஒப்பந்த நிச்சயமற்ற தன்மைகளால் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசுத் தலைவர் அநுரகுமாரவின் கீழ் பெரும் ஆரவாரத்துடன் இத்திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டபோதிலும், பிரதான ஒப்பந்ததாரர்களின் உரிமைகோரல்கள் தொடர்பாகவும், திருத்தப்பட்ட 500 மில்லியன் டொலர் கடன் வசதி தொடர்பாக, சீனா எக்ஸிம் வங்கியுடனும் பேச்சு இன்னும் நிறைவடையவில்லைஎன்றும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே உள்ள 15 வருட நிலையான 2.5 சதவீத வட்டி வீதத்திலிருந்து, குறைந்தபட்சம் அதிகபட்சம் 3.5 சதவீதம் என்ற அளவில் ஒரு மாறுபடும் விகிதத்திற்கு மாறுவதற்கான நெடுஞ்சாலைகள் அமைச்சின் முன்மொழிவு குறித்து அரச நிதி பற்றிய குழு குழப்பமடைந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீண்ட கால சீனக் கடன் விகிதங்களில் எதிர்காலத்தில் மாற்றங்கள் ஏற்பட்டால், இரு தரப்பினருக்கும் சமமான நன்மைகளை வழங்கும் ஒரு நியாயமான மற்றும் சமநிலையான ஒப்பந்தத்தை உறுதி செய்யுமாறு போக்குவரத்து அமைச்சை கோப்குழு வலியுறுத்தியதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

# மருந்துத் தட்டுப்பாட்டுக்கு நிதி அல்ல கொள்முதல் சிக்கல்களே காரணமாம்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்துப் தட்டுப்பாட்டுக்கு நிதிப் பிரச்சினை காரணமல்ல, கொள்முதலில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளன. வெளிப்படையான நடவடிக்கைகள் ஊடாக இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அம்பாறை பகுதியில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான கொள்முதல் செயல்முறைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன.அதன்படி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகள் நவம்பர் மாதத்திற்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்படும். ஆகவே மருந்து விநியோகத்தில் பெரும் நெருக்கடி இக்காலப்பகுதியில் ஏற்படாது.

சில மருந்துகள் தனியார் சந்தையில் கிடைக்காது, திறந்த வெளியில் கிடைக்காது, மருந்தகங்களிலும் கிடைக்காது. இதுபோன்ற பல சிக்கல்கள் உள்ளன. மருந்துப் பதிவின்போது வரம்பற்ற விலைகளைச் சமர்ப்பிப்பவர்களின் பதிவை நாங்கள் அனுமதிப்பதில்லை. தெற்காசிய நாடுகளின் தற்போதைய சந்தை நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட விலை வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதை விரும்பாதவர்கள் மருந்துகளை விநியோகிக்கமாட்டார்கள். கேள்வி கோரலுக்கான பொறுப்பை அரசமருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடம் வழங்கியுள்ளோம். சுமார் 80 முதல் -85ல் % வரையான பணி அதில் நிறைவு பெற்றுள்ளது. நாம் ஏற்கனவே கொள்வனவு செய்த மருந்துகள் எதிர்வரும் ஓரிரு மாதத்துக்குள் பெற்றுக்கொள்ளப்படும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆயிரம் வீடுகள் கையளிப்பு

வீடுகளை நிர்மாணிப்பதற்கு நிதி வசதி அற்ற சுமார் 4000 ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் வகையில், வீடமைப்பு அதிகாரசபையால் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ், நிறைவு செய்யப்பட்ட ஆயிரம் வீடுகளை இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் ஊடாக அரசுத் தலைவர் பொதுமக்களிடம் கையளித்தார்.

இந்திய ஆளும்தரப்பின் உதவியுடன் யு.என். ஹபிட்டாட்(ஷீஹி கூஷிழிணுஷ்மிழிமி) நிறுவனத்தின் தலையீட்டுடன் முன்னெடுக்கப்படும் அம்பத்தலே நீர் வழங்கல் திட்டமும் அடையாள ரீதியாக அரசுத் தலைவரிடம் கையளிப்பு

உலக குடியிருப்புதின நிகழ்வுகள் நேற்றுக் காலை அலரி மாளிகையில் அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையில் நடைபெற்றன.

'சொந்தமாக இருக்க இடம் - ஒரு அழகான வாழ்க்கை' என்ற தொனிப்பொருளின் கீழ், அதன் தேசிய நிகழ்வு நடைபெற்றதோடு அதனுடன் இணைந்ததாக ஒக்டோபர் 01-05 வரை குடியிருப்பு வாரம் அறிவிக்கப்பட்டு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

பல்வேறு காரணங்களால் வீட்டுப் பத்திரங்கள் தாமதமான ஆயிரம் பயனாளிகளுக்கு காணி உறுதிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 357 பயனாளிகளுக்கு அடையாள ரீதியில் வீட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. வீடு கட்டுவதற்கு நிதி வசதி அற்ற ஆயிரம் ஏழைக் குடும்பங்களுக்கு தலா ஒரு மில்லியன் ரூபாய் நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 157 பேருக்கு அடையாள ரீதியாக காசோலைகள் வழங்கப்பட்டன.

உலக குடியிருப்புதினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்விலும்,நகர அபிவிருத்தி அதிகாரசபையால் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்விலும் அரசுத் தலைவர் பங்கேற்றார்.

இதேவேளை, உலக குடியிருப்புதினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களின் கலைத் திறமைகளை மேம்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட சித்திரக் கண்காட்சி மற்றும் வீட்டுத் திட்டமிடல் தொடர்பான படைப்புகள் உள்ளடங்கிய கண்காட்சியிலும் அரசுத் தலைவர் பங்கேற்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலகே, தற்போதைய ஆளும்தரப்பு நாட்டு மக்களின் வீட்டுவசதி கனவை நிறைவேற்ற ஒரு விரிவான திட்டத்தை திட்டமிட்டு செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

வீடு தொடர்பான எண்ணக்கருவை சமூகத்தில் கருத்தாடலுக்கு உட்படுத்துவதன் மூலம் வீட்டு திட்டமிடல் குறித்த முறையான திட்டத்தின் அவசியத்தை ஆளும்தரப்பு அடையாளம் கண்டுள்ளதாகவும், அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான, வசதியான மற்றும் மரியாதைக்குரிய வாழ்க்கைச் சூழலை வழங்க ஆளும்தரப்பு உறுதி பூண்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸின் செய்தியை ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியிருப்புத் திட்டத்தின் இலங்கை திட்ட முகாமையாளர் ஹர்ஷினி ஹலங்கொட வாசித்தார்.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி. சரத்இ மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப், கொழும்பு மேயர் வ்ராய் கெலி பல்தசார் , இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் முதல் செயலாளர் (அரசியல்) நவ்யா சிங்லா மற்றும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள், அரசுத் தலைவர்யின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ஜி.எம்.ஆர்.டி. அப்பொன்சு, நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் மற்றும் சிரேஸ்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

## நாகப்பட்டினம் கப்பல் சேவை தீபாவளியையொட்டி நாளாந்தம்

காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்திற்கும் இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை வாரத்தில் அனைத்து நாட்களிலும் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஒக்டோபர் 8 முதல் 28 வரையில் நாளாந்தம் குறித்த கப்பல் சேவை இடம்பெறும் என சிவகங்கை கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் செவ்வாய்க் கிழமை தவிர்ந்த வாரத்தின் ஏனைய ஆறு நாட்களும் குறித்த சேவை இடம்பெற்றுவந்தது.

இந்நிலையில் பண்டிகை காலத்தில் அனைத்து நாட்களிலும் சேவையை வழங்கும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கப்பல் சேவையில் தீர்வை அற்ற கடைத் தொகுதியும் (Duty free) புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

## 405 கிலோ பீடி இலைகள் கற்பிட்டி கடலில் சிக்கின

### இருவர் கைது

(சியாஜ்)

இலங்கை கடற்படையினர் ஒக்டோபர் 03ஆம் நாள் கற்பிட்டி குடாவ கடல் பகுதியில் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வர முயன்ற சுமார் நானூற்று ஐந்து கிலோகிராம் பீடி இலைகள், ஒரு டிங்கி படகு கைப்பற்றப்பட்டதுடன் இரு சந்தேக நபர்களையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கடல் வழிகள் ஊடாக கடத்தல் உட்பட சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்த்து தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடற்கரைகளை உள்ளடக்கி கடற்படை வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதனடிப்படையில் கற்பிட்டிக்கு அருகிலுள்ள கடல் பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் விஜய

நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமான டிங்கி படகு சோதனை செய்யப்பட்டது.

இதன் போதே இவை கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி நடவடிக்கையின் போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கற்பிட்டி முகத்துவாரம் மற்றும் பள்ளிவாசல்துறை பகுதிகளைச்

சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள், டிங்கி படகு மற்றும் பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மதுவரி திணைக்கள சிறப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.



## சமூக ஊடகங்களுக்கு வரையறை அவசியம், நிகழ்நிலை காப்புச் சட்டம் அதற்கு தீர்வல்ல

### சாணக்கியன் எம்.பி. கருத்து

(சக்திவேல்)

சமூக ஊடக பிரகடனம் 2.0 சமூக ஊடக பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு, ஜனநாயக மதிப்புகள் மற்றும் தொடர்புடைய சிக்கல்கள் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்கும் திட்டம் மட்டக்களப்பு - கல்லடி தனியார் விடுதியில் ஒக்டோபர் 04ஆம் நாள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.




கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இலட்சுமணன் தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்....

அதிகளவு சமூக ஊடகங்களுடாக நான் பாதிக்கப்படுகின்றவன் என்ற அடிப்படையில் சமூக ஊடகங்களுக்குரிய சட்டங்களை கொண்டு வரத்தான் வேண்டும் சமூக ஊடகங்கள் என்றால் அதற்கு ஒரு வரையறை இருக்கத்தான் வேண்டும் என கூறினார்.

சமூக ஊடகங்களில் பல நல்லவைகள் இருக்கத்தான் செய்கின்றன. சமூக ஊடகங்களை பாவித்து நன்மை அடைந்தவர்களும் இருக்கின்றார்கள், பாதிக்கப்பட்டவர்களும் இருக்கின்றார்கள். அந்த

வகையில் சமூக ஊடகங்களை ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒரு சட்டத்திற்கு கொண்டு வரத்தான் வேண்டும். அதற்காக நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பது அதற்குரிய பதிலடு இல்லை.

நிகழ்நிலை காப்புச் சட்டம் பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்தபோது அதற்கு எதிராக பாராளுமன்றத்துக்குள்ளும், பாராளுமன்றத்திற்கு வெளியிலும், மிகக்கடுமையாக கருத்துக்களை தெரிவித்து செயல்பட்டவர்கள் நாங்கள். நிகழலை காப்பு சட்டத்தில் இருக்கின்ற மிகவும் ஆபத்தான விடயம் என்னவெனில் அதற்காக வேண்டி ஒரு ஆணை குழு ஒன்று நியமித்திருக்கின்றார்கள். அந்த ஆணை குழுக்களின் பிரதிநிதிகளை நியமிப்பவர் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் அமைச்சர் நியமிப்பார். அந்த ஆணைகுழு நாட்டிலே இருக்கின்ற சமூக ஊடகங்களை கையாளுமாக இருந்தால் அது ஒரு அபாயகரமாக இருக்கும் என்பதற்காக நாங்கள் அதனை மிகவும் கடுமையாக எதிர்த்து இருந்தோம்.

ஆகவே அதற்கு மாற்று வழியாக நாங்கள் கூறியது என்னவெனில் அதற்கு சட்டரீதியாக ஒரு வழிவகையை வழங்குங்கள் என நாங்கள் தெரிவித்து இருந்தோம்.

ஒருவர் சமூக ஊடகத்தில் இன்னும் ஒருவரை பற்றி அவதூறாக தெரிவிக்கும் பட்சத்தில் அதற்கு ஆணைக் குழுவுக்கு பதில் வழங்கும் அதிகாரத்தை கொடுக்காமல், மாறாக நீதிமன்றத்தை நாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள் என நாங்கள் கேண்டிருந்தோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வரும்போது நிகழலை காப்பு பட்டத்தை நீக்குவோம் என அவருடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார்கள். அதேபோல் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவோம் எனவும் தெரிவித்திருந்தார்கள். இப்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு பதிலாக பிறிதொரு சட்டத்தை கொண்டு வருவதாக தெரிவிக்கின்றார்கள்.




என்னைப் பொறுத்தவரையில் நிகழ்நிலை காப்புச் சட்டத்தையும் இவ்வாறு நீக்காமல் அதற்கும் மாற்றாக இன்னும் ஒரு சட்டத்தை கொண்டு வருவார்கள் என நாங்கள் நினைக்கின்றோம்.

எனவே இது ஒரு மிகவும் முக்கியமான விடயம். பொறுப்பு வாய்ந்த சமூக ஊடகங்கள் தொடர்பான சட்டத்தை கொண்டு வருவதற்கு எங்களுடைய முழுமையான ஆதரவும் முழுமையான ஒத்துழைப்பும் இருக்கும் என அவர் தெரிவித்தார்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

# இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் இலவச வைத்திய முகாம் ஒக்டோபர் 07ஆம் நாள் இடம்பெறவுள்ளது.

இதில் சிரேஷ்ட ஆயுர்வேத வைத்திய நிபுணர் மற்றும் தேர்ச்சி பெற்ற ஆயுர்வேத வைத்தியர்கள் சிகிச்சை அளிப்பதற்காக வருகை தரவுள்ளனர்.

இவ்வைத்திய முகாம் செவ்வாய்க் கிழமை அன்று காலை 10.00 முதல் மதியம் 2.00 மணி வரை முள்ளிப்பொத்தானை 96, அக்ரபோதிய விகாரையில் இடம் பெறவுள்ளது.

இதில் சீனி நோயிக்கான இரத்த பரிசோதனை, சிறுநீரக வியாதிற்கான விஷேட வைத்திய சிகிச்சை முறைகள், பக்கவாதம் , முழங்கால் வலி ,முதுகு வலி , இடுப்பு வலி , தசை பிடிப்பு போன்ற நோய்களுக்கான விஷேட வைத்திய சிகிச்சை, அக்கியுபஞ்சர், கப்பிங், பத்து கட்டுதல், சீனி வியாதிக்கான நாட்பட்ட காயங்களுக்கான மருந்து கட்டுதல் போன்றவற்றுக்கான சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆராச்சிகட்டு பிரதேச மக்களை அச்சுறுத்திய விமானம்

( சியாஜ்)

ஆராச்சிகட்டு - நல்லதரண்கடுவ பகுதியில் ஒக்டோபர் 04ஆம் நாள் இரவு வேளையில் சந்தேகத்திற்கிடமான விமானம் ஒன்று பல முறை தாழ்வாக பறந்ததாக பிரதேச மக்கள் பொலிஸ் அவசர பிரிவுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

விமானத்தின் சக்கரங்களை கண்களால் காண முடிந்ததாகவும், குறித்த விமானத்தில் இருந்து ஒருவகையான வெளிச்சம் வெளிப்பட்டதாகவும் தெரிவித்த மக்கள், குறித்த விமானம் ஏதேனும் ஆபத்தில் சிக்கி இருக்கலாம் என நினைத்து பொலிஸ் அவசர பிரிவுக்கு முறைப்பாடு செய்ததாக தெரிவித்தனர்.

விடயம் குறித்து விசாரணை நடத்திய பொலிஸார், மழையினால் கட்டுநாயக்க விமான நிலையம் நீரில் மூழ்கி இருந்ததாகவும், அதனால் குறித்த விமானம் தரை இறங்க முடியாமையால் சிறிது நேரம் வானில் பறந்ததாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக வதிவிட தினமான நேற்று வவுனியாவில் வீடு கையளிப்பு

உலகவதிவிடதினத்தைமுன்னிட்டுவவுனியாவில் வீடுகள் மற்றும் உறுதிப்பத்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று (05) இடம்பெற்றது.

நாடுபூராவும்உலகவதிவிடதினத்தினைமுன்னிட்டு வீடு கையளிக்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றநிலையில்வவுனியாபேயாடிகூழாங்குளம் பகுதியில்,பயணாளிஒருவருக்குகூட்டுறவுஅபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவினால் வீடு கையளிக்கப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிற்கான காணி உறுதிப் பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை வவுனியாவில் உள்ள நான்கு பிரதேச சபை பிரிவுகளிலும் 20 வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளதுடன், 62 பேருக்கு உறுதி பத்திரமும் வழங்கி வைக்கப்பட்டது.







இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் கமலதாசன், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட அதிகாரி தேவிகா மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருத்தனர். (100)


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



●CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)

●NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்

இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:

●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்

●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு

●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD

JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.

தொடர்பு:070 7070 722

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான நாடுகள் சபையில் இருந்து வெளியேறியமை சிறந்த இலட்சினமாகும். பலஸ்தீனத்தை ஒரு நாடாக உலக நாடுகள் அங்கீகரிக்கவேண்டும்.

ஒரு நாடு பற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு தீர்மானம் எடுக்க முடியாது. இலங்கையானது சர்வதேசநாணய நிதியம்உட்பட வெளிநாட்டுநிதிநிறுவனங்களை மாத்திரம் தஞ்சமடைந்திருந்தால் என்றோ ஒருநாள்இலங்கையின்மக்களாணையையும் விட்டுக்கொடுக்க நேரிடும்.

நாட்டின் இறையாண்மை, சுயாதீனம் அரசமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் உள்ளக விவகாரத்தி;ல் சர்வதேசம் தொடர்ந்து தலையிடுகிறது. சுதந்திரத்துக்குப்பின்னர்ஆட்சியில்இருந்தஎந்த அரசதலைவர்களும்சர்வதேசவிசாரணைக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் பல பிரேரணைகளை கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளன.

இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளுக்கு அமைவாக 58 இராணுவத்தினருக்கு ஒருசில நாடுகளுக்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இலங்கையானது ரோம் உடன்படிக்கையில் ஒருபோதும் கைச்சாத்திடகூடாது.அவ்வாறு கைச்சாத்திட்டால் இராணுவத்தினர் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்றார்.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின்தேவைக்கேற்பவேபொலிஸ்மா அதிபர் செயற்படுகின்றார். தற்போது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் நாளுக்கு நாள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். பொறுத்தமற்றவர்கள் பதவிகளில் நியமிக்கப்படுகின்றனர். விரைவில் இது தொடர்பில் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாம் நடவடிக்கை எடுப்போம். சேவையிலிருந்த போது காயமடைந்த சுமார் 400 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாடளாவிய ரீதியில் இருக்கின்றனர்.

அவர்களுக்கு இலகுவாக பொறுப்புக்களை மாத்திரமே நிறைவேற்ற முடியும். ஆனால் அவர்களுக்குமிகவும்கடினமாகபொறுப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நீண்ட நேரம் நிற்க முடியாதவர்கள் போக்குவரத்து பிரிவில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இதுஅவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். எனவே இவர்கள் தொடர்பில் மனிதாபிமானத்துடன் சிந்தித்துசெயற்படுமாறுபொலிஸ்மாஅதிபரிடம் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## 16 வயதில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டின் சொத்துக்களான சிறுவர்களை தவறாகவழிநடத்துவதற்கான சூழலை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு உருவாக்கிக் கொண்டிருக்கிறது. சபைமுதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க 16 வயது பூர்த்தியடைந்த சிறுவர்களுக்கு பாலியல் உறவில்ஈடுபடமுடியும்எனநாடாளுமன்றத்தில் கூறுகின்றார். இந்நாட்டில் சிகரட் கொள்வனவு செய்வதற்கு 21 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பது சட்டமாகும். இவ்வாறான நாட்டில் 16 வயதுடையோருக்கு இதுபோன்ற சுதந்திரம் வழங்கப்பட்டால் 2500 ஆண்டுகள் பழமையான பௌத்த தேரவாதத்தை பின்பற்றும் தாய் நாட்டின் ஒழுக்கத்துக்கு என்னவாகும்?

பௌத்தம் மாத்திரமின்றி ஏனைய அனைத்து மதங்களும் சிறுவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஒழுக்கத்தை சீரழிக்கும் வகையிலேயே சபை முதல்வரின் கருத்து அமைந்துள்ளது. 16 வயது சிறுமியொருவர் கர்ப்பம் தரித்தால் அந்தச் சிறுமிக்கு அமைச்சர் பிமல்ரத்நாயக்கவழங்கும்பதில்என்ன? கடந்த வாரத்தில், இருவேறு பிரதேசங்களில், பிறந்த சிசுக்கள் வீதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. திருமணத்துக்கு முன்னதான பாலியல் உறவுகளால் எய்ட்ஸ் உள்ளிட்ட நோய்கள் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகிறது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை17சதவீதத்தால்அதிகரித்துள்ளது. சுமார் 20 வயதுடைய இளம் ஆண், பெண்கள் மத்தியிலேயே இந்நோய் அதிகளவாகக் காணப்படுவதாகவும், அதிக நோயாளர்கள்அநுராதபுரம்மாவட்டத்திலேயே இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்க தன்பாலீர்ப்பினரை அடிப்படையாகக்கொண்டசுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முயற்சிகளையும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கும், தாய்லாந்து செல்வதற்குமான நோக்கங்கள் வேறாகும். ஆளும்தரப்பு இதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

அரசுத் தலைவரும், அயலுறவுறத்துறை அமைச்சரும்தாம்இதனைஅனுமதிக்கவில்லை எனக் கூறினாலும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் இது குறித்த கடிதத்தை அனுப்பியவர்களுக்கு எதிராக இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறித்த கடிதம் இன்றுவரை மீளப்பெறப்படவும் இல்லை.

அமெரிக்கா போன்ற வல்லரசு நாட்டில் ட்ரம்ப்கூட இதை அனுமதிக்கவிரும்பாதபோது, எம்மைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடு எவ்வாறு அதனை அங்கீகரிக்க முடியும்? இளைஞர்களின் வாக்குகளை நோக்கமாகக் கொண்டே ஆளும்தரப்பு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. மகாசங்கத்தினரும், பேராயர் கர்தினால் மெல்கம்ரஞ்சித் ஆண்டகையும் இதற்குக்கடும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றனர். எனவே ஆளும்தரப்பு இந்த விடயத்தில் ஆழமாகச் சிந்தித்து தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# 100 பசுமையான கடற்கரை பூங்காக்களை அமைக்க ஆளும்தரப்பு நிகழ்ச்சித்திட்டம்

(ஸாகிர்)

அரசாங்கத்தின் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திடத்தின் கீழ் 100 பசுமையான கடற்கரை பூங்காக்களை அமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவாவினால் பொத்துவில் பிரதேசத்தில் இதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கான அடிக்கல் ஒக்டோபர் 02ஆம் நாள் நாட்டி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், லகுகல பிரதேச சபையின் உதவி தவிசாளர் ரவிந்திர, பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் முஷர்ரப், பொத்துவில் பிரதேச செயலாளர் நசீல், கிழக்கு மாகாண கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள பொறியியலாளர் துலஷிதாஸன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பொத்துவில் பிரதேச இணைப்பாளர் ஆதம்சலீம், பொத்துவில் பிரதேசசபை உறுப்பினர்கள், இணைப்புச்செயலாளர்,பிரதேச செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மக்களின் அன்பு லாப நோக்கற்றது

## மகிந்தவுக்கு திடீர் ஞானோதயம்

நம்பிக்கை மற்றும் பரஸ்பர மரியாதையை அடிப்படையாகக் கொண்ட மக்களின் அன்பு இலாப நோக்கங்களுக்கு அப்பாற்பட்டது என்று முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ பேஸ்புக் வலைத்தளத்தில், தமது வாழ்நாளின் பெரும்பகுதியை மக்களிடையே கழித்ததால், மக்களின் அன்பை நன்கு அறிந்திருப்பதாக பதிவேற்றம் செய்துள்ளார்.

இதன் காரணமாக, அதன் மதிப்பு எப்போதும் இல்லாத அளவுக்கு மேலும் அதிகமாகி உள்ளதாகவும், இது ஒரு அரசியல் உறவு மட்டுமல்ல, கடினமான ஒரு இதயப்பூர்வமான பிணைப்பு என்றும் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

எனவே, அவற்றை உடைக்கும் முயற்சிகள் மூலம் இன்னும் அதிகமான பிணைப்புகளை வலுப்படுத்த முடியும் என்பதை சுட்டிக்காட்டிய முன்னாள் அரசுத் தலைவர், மக்களுடன் செலவிடும் இந்த நேரம் முழுவதும் ஒரு தலைவராக தான் பெறக்கூடிய மிகப்பெரிய மகிழ்ச்சியை அனுபவிப்பதாகவும் பதிவேற்றம் செய்துள்ளார்.

# மூத்த ஊடகர் அமீனுக்கு புதிய பதவி



(ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் அமீன் பலஸ்தீன சர்வதேச ஊடக மற்றும் தொடர்பாடல் மன்றத்தின் இலங்கைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

துருக்கி இஸ்தான்புல் நகரை தலைமையகமாகக் கொண்டியங்கும் பலஸ்தீன சர்வதேச ஊடக மற்றும் தொடர்பாடல் மன்றம் 2014 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதுடன், பலஸ்தீன மக்களின் குரலை உலக ஊடகங்களில் வலுப்படுத்துவது மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள், ஊடக ஆசிரியர்கள், ஊடக நிபுணர்கள் ஆகியோருக்கிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது இதன் முக்கிய இலக்காகும்.

இம்மன்றம் வருடந்தோறும் நடத்தும் மாநாடுகள், பயிற்சிகள், ஊடக முன்முயற்சிகள் மற்றும் ஆய்வுகளின் மூலம் 70க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்களை ஒன்றிணைக்கின்றது.

இலங்கையின் ஊடகத் துறையில் நீண்டகால அனுபவம் கொண்ட அமீன் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவர் என்பதுடன், இலங்கையில் முஸ்லிம் அமைப்புகளின் கூட்டு நிறுவனமான முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைவரும், தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளருமாவார்.

நல்லிணக்கத்தையும் சமூக ஒற்றுமையையும் ஊக்குவிக்கும் பணிகளில் முக்கிய பங்காற்றிவரும் இவர், ஒழுக்கநெறியுடன் கூடிய ஊடகப்பண்பாட்டை வளர்த்தெடுத்தல், ஊடக அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்தல் மற்றும் ஊடக சுதந்திரம் தொடர்பில் முன்னிற்பதற்காக பரவலாகப் பாராட்டப்பட்டுள்ளார்.

# அழகு பொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி செயலமர்வு

(ஹாரீஸ்)

ரெசின் கலை மூலம் அழகு பொருட்கள் தயாரித்தல் தொடர்பாக யுவதிகளுக்கு பயிற்சி செயலமர்வு நேற்று (05) சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட சமுர்த்தி காரியாலயத்தின் ஏற்பாட்டில் மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் ரஞ்சனியின் நெறிப்படுத்தலில் இப்பயிற்சி செயலமர்வுகள் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் இடம்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் றியாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் பதில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருமான ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் அன்வர், சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் றிபாயா, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஷர்பீன், காரைதீவு சமுர்த்தி கருத்திட்ட உதவியாளர் பாயிஸ் உள்ளிட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கு பயிற்றுவிப்பாளராக கல்வி அமைச்சின் ரெசின் கலை பயிற்றுவிப்பாளர் சஞ்சலா சுபாசினி கலந்து கொண்டு இப்பயிற்சி செயலமர்வை நடாத்தினார். இதில் சாய்ந்தமருது, கல்முனை, காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களிலிருந்து பயிற்சியாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



## கடந்த காலங்களில்

# தவறான கருத்துக்கள் மூலமாக கலவரங்கள் ஏற்படுத்தப்பட்டன

## பிரபு எம்.பி கருத்து




(சக்திவேல்)

மட்டக்களப்பு - கல்லடி தனியார் விடுதியில் சமூக ஊடக பிரகடனம் 2.0 சமூக ஊடக பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு, ஜனநாயக மதிப்புகள் தொடர்புடைய சிக்கல்கள் தொடர்பான விழிப்புணர்வு உருவாக்கும் திட்டம் ஒக்டோபர் 04ஆம் நாள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு.

கடந்த காலங்களில் தவறான கருத்துக்களை மக்களுக்கு கொண்டு சேர்த்து அவை மக்களுக்கு பரப்பப்பட்டு கலவரங்கள் குழப்ப சூழ்நிலைகள் இந்த நாட்டிலே இடம்பெற்றிருக்கின்றன. கருத்து தெரிவிக்கும் போது அதன் உண்மை தன்மை அது சரியானதா என்பதை அவதானித்து சிந்தித்து செயல்பட வேண்டியுள்ளது.

நிகழ்நிலை காப்பு சட்டம் தொடர்பில் சமூகத்திலேயே ஒருவர் அவரின் தனி உரிமை சார்ந்த விடயங்களில் கருத்தில் கொள்ள வேண்டும் நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது போன்று சட்டங்களிலும் நன்மை தீமைகள் இருக்கின்றன.

இந்த இரண்டு விடயங்களையும் கருத்தில் கொண்டுதான் சட்டங்கள் இயற்றப்படுகிறன. அந்த வகையில் நிகழ்நிலை காப்பு சட்டம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் கருத்துக்களை வெளியிடுகின்றவர்கள் தொடர்பிலும் அவர்களை பாதுகாப்பு தொடர்பாகவும் சிறந்த கருத்துக்களை மக்களுக்கு கொண்டு சேர்க்கின்ற விடயங்கள் தொடர்பிலும் கருத்துக் கொள்ள வேண்டும்.

சில சமூக ஊடகங்களில் நாங்கள் பல கருத்துக்களை அவதானித்திருக்கின்றோம். எம்மை கூட தவறானதாக சமூக ஊடகங்களில் சித்தரித்து காட்டப்படுகின்றன. அவ்வாறாக அந்த ஊடகங்களை பயன்படுத்துகின்றவர்கள் உண்மையான தகவல்களை சேகரித்துக் கொண்டு கருத்துக்களை வெளியிட வேண்டும்.

தனி நபரின் உரிமைகளையும், தனி நபரின் கருத்துக்களையும், பாதுகாக்க வேண்டும். ஏதோ ஒரு தனி நபர் அவ்வாறான கருத்துக்களை பாதிக்கப்படாத வகையில் அவர்களையும் பாதுகாக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றவர்கள் அது தொடர்பான தெளிவை பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒருவருக்குரிய சுதந்திரம் என்பது இன்னும் ஒருவரின் மூக்கு நுனி வரைக்கும்தான் அமைந்திருக்கின்றது. அதனை கடந்து செல்லாமல் நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எனவே சமூக ஊடகங்கள் தொடர்பான சட்டம் தொடர்பில் அரசாங்கம் மக்களின் கருத்துக்களையும் அறிந்துதான் அதனைக் கொண்டு வருகின்றது.

எனவே சட்டம் தொடர்பில்லாத கழிவுகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்கு இந்த முயற்சியினை மேற்கொண்டிருக்கின்ற மாற்றுக்கொள்கைகளுக்கான அமைப்பு மற்றும் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் போன்றவற்றிற்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என தெரிவித்தார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.10.2025இல் வெளியிடப்பெற்றது